Enrich, XV (I): 5 - 11, July - Dec., 2023

# ‘சேவல்கட்டு’ புதினத்தில் பாத்திரப்படைப்பு

[1] சி. தேவி, [2]முனைவர் கு. நீதா
[1]முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 23212014022005
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது)
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி
[2]நெறியாளர் & இணைப்பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**ஆய்வுச்சுருக்கம்**

தனிமனிதன் மற்றும் சமூகத்தோடு கொண்டுள்ள உறவுகளை ஆராயும் நோக்கில் படைப்பாளரின் பல்வேறு முயற்சிகளையும், ஆக்கங்களையும் கொண்ட புதிய பரிமாணங்களை உடையது புதினங்கள். காப்பியம், நாடகம், புதினம் ஆகிய இலக்கியங்களுக்கு முதன்மையான உறுப்பு ‘பாத்திரங்கள்’ எனப்படும் கதைமாந்தர்களே. சமுதாயத்தில் வாழும் மனிதர்களே புதினங்களில் பாத்திரங்களாக உருவெடுக்கின்றனர். அப்பாத்திரங்களைப் புதின ஆசிரியர்கள் தன் விருப்பப்படி மெருகூட்டி அமைக்கின்றனர். அந்த வகையில் முதன்முதலில் ‘‘சாகித்ய அகாதமி இளம் எழுத்தாளர்’’ விருது பெற்ற ஆசிரியர் ம.தவசியின் ‘சேவல்கட்டு’ புதினத்தில் பாத்திரப்படைப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

ஒரு படைப்பை உருவாக்குவதில் முதன்மையாகவும், அடித்தளமாகவும் விளங்குபவர் படைப்பாளி. தன்னுடைய சூழல் வாயிலாகத் தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு வாழ்வியல் கூறுகளைப் படைத்தளிக்கிறார். தான் வாழும் உலகில் காணும் மனிதர்களையும் நிகழ்ச்சிகளையும் மட்டுமல்லாமல் அவற்றுடன் பிற உயிரினங்களுக்கான பண்பினையும் இணைத்து இன்பம் அளிக்கிறார். பல்வேறு சேவல்களுக்கிடையேயான சேவல் போட்டியில் மனிதன் தன் சூழலையும், கதாபாத்திரங்களையும் இணைத்துக்கொள்கிறான் என்பதையும், பாத்திரப்படைப்பானது கதை நிகழ்விற்கு ஏற்றவாறு சிறப்புறப் படைக்கப்பட்டுள்ளது என்பதையும் ‘சேவல்கட்டு’ புதினத்தின் வழியே அறியலாம்.

**புதினத்தில் பாத்திரப்படைப்பின் இன்றியமையாமை**

கதை, கருத்து, பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், களம், கற்பனை எனப் பல கூறுகள் புதினத்தில் இடம் பெற்றாலும் பாத்திரப்படைப்பு அவற்றுள் முக்கியமான ஒன்றாகும். ஒரு புதினத்தின் வெற்றிக்கு அதில் இடம்பெறும் பாத்திரப்படைப்பு என்பது முதன்மையான காரணியாகும். புதினத்தின் கதைக் கருவினும் பாத்திரப்படைப்பு மேலானது என்பர். வால்டர் ஆலன், **“ஒரு புதினத்தின் முழுமையான இன்றியமையாமை பாத்திரப்படைப்பேயாகும்”**[1] என்கிறார்.

பாத்திரம் சிறப்பாக அமைந்தால் தான் கதைக்கரு அழுத்தம் பெறும். கதை உறுப்பினரில்லாமல் கதை இயங்காது. ஆதலின் புதினங்களுக்கு பாத்திரப்படைப்பு இன்றியமையாததாகும்.

ஒரு புதினத்தைப் படித்ததும் அதன் நடையோ, நோக்குநிலையோ மனதில் நிற்பதில்லை. மறக்க முடியாத நிலையில் சில பாத்திரங்கள் அமைகின்றன. **“நாவலில் பாத்திரங்கள் உயிர்நாடியாய் அமைகின்றன”**[2] என்கிறார் க.கைலாசபதி.

படைப்பாளி, சமுதாயக் கருத்துக்களை விளக்க அதற்கேற்பப் பாத்திரங்களைத் தேர்வு செய்வார். **“சிறந்த புதினத்தில் படைக்கப் பெறும் பாத்திரங்கள் நம் உலகில், நம்மைப் போல் தலைநிமிர்ந்து நடப்பவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் ஒரு கற்பனைக் கதையில் தோன்றும் பாத்திரங்கள் என்பதை மறந்து நாம் அவர்களோடு அன்பு காட்டவும், வெறுப்புக் காட்டவும் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்”**[3] என்று பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் கூறியுள்ளார்.

**“செம்மையான புனைகதை ஒன்றின் அடித்தளம் பாத்திரத்தைப் படைத்தலே மற்றையது எதுவும் இல்லை”**[4] என்று பாத்திரப்படைப்பின் முதன்மையை டபிள்யூ.ஜெ.ஹார்வி வலியுறுத்திக் கூறுகிறார்.

மேலும், மேனாட்டுத் திறனாய்வாளரான மரைன் எல்வுட், மிரியம் ஆல்டின் என்பவர்கள் பாத்திரப்படைப்பு பற்றி, **“கதைப்பின்னலை விட இன்றியமையாத ஒன்று புனைகதைகளில் உண்டு. அது தான் கதைப்பின்னலுக்குப் பொருளையும், சிறப்பையும், உயிரோட்டத்தையும் கொடுக்கின்ற பாத்திரமாகும்.”**[5] என்று குறிப்பிட்டுள்ளனர்.

**பாத்திரப்படைப்பு முறைமை**

ஒரு நல்ல புதினத்தைப் படிக்கும் போது, அதில் இடம் பெறும் கதைமாந்தர்கள் நம்மோடு வாழும் மனிதர் போன்ற உணர்வை நமக்குள் எழுப்ப வேண்டும். இதுவரை நம்மோடு வாழ்ந்த நெருக்கமான உறவினர் எங்கோ பிரிந்து சென்றுவிட்ட துயரமும் நமக்குள் எழ வேண்டும். அதுவே சிறப்பான புதினமாகப் பேசப்படும்.

ஆல்லட் மிர்ரியம் என்ற அறிஞர் **“ஒரு படைப்பாளனின் பாத்திர ஆக்கத் திறனே புதினத்தைப் படித்து முடித்த பின்னும், மனதில் ஏற்படுத்தும் பதிவுகளில் முதன்மை பெறுகின்றது.”**[6] என்று கூறுவது இங்கு கருதத்தக்கது.

**“கதைகளில் பாத்திரங்களின் படைப்பே வெற்றியைத் தேடித்தரும்”**[7] என்பார் ந.பிச்சமூர்த்தி. புதினங்களின் வெற்றி, ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் பாத்திரங்களைப் பொறுத்தே அமைகிறது. கதைமாந்தர்கள் பெரும்பாலும் நடமாடும் மனிதர்களின் படப்பிடிப்பாகவும், அவர்களின் குண இயல்புகளின் சிறப்புத் தன்மையோடும் அமைய வேண்டும். இதன் மூலம் பாத்திரப்படைப்பின் முறைமை தெளிவுபடுத்தப்படுகிறது.

**சேவல்கட்டு**

இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள சுற்றுவட்டாரக் கிராமங்களிலிருந்து பழக்கப்படுத்திக் கொண்டுவரப்படும் சேவல்களுக்கு இடையேயான போட்டியே ‘‘சேவல்கட்டு’’ ஆகும். சேவல்கட்டானது ஆப்பநாட்டுத் தாய்த் தெய்வம் அரியநாச்சியா பார்வையில் அகன்று விரிந்த ஆலமர நிழலின் கீழ் நடைபெறுகின்றது.

கட்டு, சேவலுக்கும் சேவலுக்குமா? அல்லது மனிதனுக்கும் மனிதனுக்குமா? மனிதனில் தொடங்கி சேவலில் முடிவதும், சேவலில் தொடங்கி மனிதனில் முடிவதும் நடக்கலாம் அல்லது சேவலில் இருந்து சேவலுக்கும், மனிதனில் தொடங்கி மனிதனுக்கும் முடியலாம். எது எப்படி இருந்தாலும் யாவும் மனிதர்கள் சம்பந்தப்பட்டது தான். மனிதர்களின்

வீரம், வலி, கோபம், அவமானம், பகட்டு, பெருமிதம் இன்னும் யாவற்றையும் உள்ளடக்கியது தான் சேவல் சண்டை என்கிறார் படைப்பாசிரியர்.

**சேவல்கட்டு புதினத்தின் பாத்திரங்கள்**

சேவல்கட்டு புதினத்தின் முதன்மைப் பாத்திரமாக இடம் பெறுபவர் போத்தையா. துணைமைப் பாத்திரங்களாக சேவுகப்பாண்டியன், வேலாயி, ஆறுமுகம், மகாலிங்கம், பொன்னுச்சாமி, அங்கம்மா, பேச்சி, முத்துச்செல்வம், காளிமுத்து, போஸ், வெள்ளையம்மா, இருளாயி, தேவி, செவல்பட்டி வில்லி போன்றோர் இடம்பெற்றுள்ளனர்.

**முதன்மைப் பாத்திரங்கள்**

புதினம் என்ற படைப்பிலக்கியத்தில் பாத்திரப்படைப்பு முக்கிய அங்கம் வகிக்கிறது. அந்த வகையில் கதை முழுவதிலும் ஊடுருவிச் செல்லும் பாத்திரங்களே முதன்மைப்பாத்திரங்கள் ஆகும். இம்முதன்மைப் பாத்திரத்தைத் 'தலைமை மாந்தா" என்றும் அழைப்பர். இதனை, **"தலைமை மாந்தர் என்பவர் குறிப்பிட் நாவலில் பெருஞ்செயல்களைச் செய்பவராகவும், அச்செயல்களால் பெரும் விளைவுகளை உண்டாக்குபவராகவும் இருப்பர்"**[8] என்று த.வே.வீராசாமி குறிப்பிடுகிறார்.

**போத்தையா**

சேவல்கட்டில் தன் அப்பா சேவுகன் அடைந்த அவமானத்தையும், வலியையும் மீட்டெடுக்க ஊர்ஊராய் கால்கடுக்க நடந்து சென்று சேவல்களை வாங்கி சேவல்கட்டிற்கு பழக்கப்படுத்துகிறார். அவ்வப்போது போத்தையாவின் நினைவலைகளில் சேவுகன் வந்து வந்து செல்கிறார். மனைவியின் பேச்சையும் மீறி குடும்பத்தைக் கவனிக்காமல் சேவல்களோடு தான், தன் வாழ்க்கை முழுவதையும் செலவிட்டு கடைசியில் பித்துப்பிடித்தவராக ஆலமரத்தில் தூக்கிட்டு இறந்துவிடுகிறார். கதை முழுவதும் சேவலோடும், சேவல் சார்ந்த மனிதர்களோடும், அவர்களின் உணர்வுகளோடும் மட்டுமே பயணிக்கிற போத்தையாவின் பாத்திரமே முதன்மைப் பாத்திரமாக அமைகின்றது.

**துணைமைப் பாத்திரங்கள்**

முதன்மைக் கதாபாத்திரங்களின் செயல்களுக்கு ஏற்பப் பெரிதும் துணை நிற்பவை துணைக் கதாப்பாத்திரங்கள் ஆகும். மனித இனத்தின் பல்வேறு பண்புகளை வெளிப்படுத்தும் வல்லமை துணைக் கதாபாத்திரங்களுக்கே உரியது.

**சேவுகப்பாண்டியன்**

மக்களிடம் வரிவசூல் செய்து கொடுக்கும் ஜமீனாகிய சேவுகன், சேவக்கட்டில் தோற்றுவிட ஊர்மக்கள் கேலி பேசுகின்றனர். சேவக்கட்டில் தோற்றதை விடவும் அவர்களின் வார்த்தைகள் சேவுகனைக் கூனிக்குறுகி தான் ஆடை களைந்து நிர்வாணப்படுத்தப்பட்டதாக உணர்கின்றான். அதன் காரணமாகப் பல வகையான சேவல்களை விலைக்கு வாங்கி, அவற்றைப் பழக்கப்படுத்தி மீண்டும் சேவக்கட்டில், அவை பெறும் வெற்றி தன் அவமான வலிக்கு மருந்திடுவதாக நம்பிக் கொண்டிருந்தான். சேவல்கட்டிற்குக் கொண்டு சென்ற பதினொரு சேவல்களும் தோற்றுவிட, அவன் நிலையிழந்து காடுகளிலே சேவலைப் போலவே அலைந்து திரிந்து கொண்டிருந்தான். போத்தையாவின் சேவல்கட்டிற்குப் பக்கபலமாக நினைவலைகளின் ஊடே ஊக்கப்படுத்திக் கொண்டிருப்பதாக சேவுகன் என்ற கதாபாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது.

**"அங்கிட்டுப் போப்பா.... போயி பொண்டாட்டி சேலையை துவை..." "என்னைக்கு சேவலை நீ ஒழுங்கா விடுறியா... அப்பத்தான் நாங்க வரி தருவோம்..."**

**“சேவலை விடத்தெரியாதவன் எல்லாம் ஐமீனாம்”**[9] (சே.ப.15) போன்ற கேலிப்பேச்சுகளால் சேவுகன் அவமானப்படுத்தப்படுகிறான்.

**காளிமுத்து**

சேவலைப் பற்றிய சூட்சுமங்களை சேவுகனுக்குக் கற்றுக் கொடுப்பவனாக காளிமுத்து பாத்திரம் இடம்பெறுகிறது. சேவலுக்கான நீர்ப்பயிற்சி முறையையும், வளர்ப்பு முறையையும் பற்றித் தெளிவாக அறிந்தவன். மனிதனின் குணத்தின் இயல்பாகவே அவன் வளர்க்கும் சேவலும் குணம் கொண்டிருக்கும் என்பதை நன்கு உணர்ந்தவன்.

**“முதலில் நாம் கவனிக்க வேண்டியது குணந்தான்…” என்றார் காளிமுத்து.**

**“என்ன சேவலுக்குக் குணமா?” ஆச்சர்யமாய்க் கேட்டான் சேவுகன்.**

**“ஆமாப்பு… அதிலென்ன உங்களுக்கு ஆச்சர்யம். அதன் குணந்தான் யாவற்றையும் தீர்மானிக்கும். அந்த குணத்தை நாம் தான் அதற்கு ஊட்ட வேண்டும்… காளிமுத்து சொல்லிக் கொண்டே போக சேவுகன் பிரம்பிப்பாய்க் கேட்டுக் கொண்டிருந்தான்.”**[10] (சே.ப.47)

**“சேவலுக்கென்று ஒரு வாகு, குணம், வீம்பு, கோபம் தந்திரம் இருக்கு. வயசுக்கு வந்த சேவலா பாத்து வாங்கி இருந்தால் தோது. நாம் சொல்படி விளையாட்டை ஆட வைக்கலாம். எல்லாம் பழக்கம்தாம்ப்பு… மனுச கழுதையிலே எத்தனை குணம் அம்புட்டும் சேவலுக்கும் உண்டு. அத கண்டுபுடிச்சி மாத்த வேண்டியது நாம்தான்.”**[11] (சே.ப.50)

ஒவ்வொரு வகையான சேவலுக்கும் கடுமையான பயிற்சியும், நிதானமும் தேவைப்படுகிறது என்பதை காளிமுத்துவின் உறுதியான கதாபாத்திரம் வழியே அறிந்துகொள்ள முடிகிறது.

**மகாலிங்கம்**

சொந்தபந்தம் என்று யாரோடும் ஒட்டி உறவாடும் குணம் அற்றவனாக இருந்தான் மகாலிங்கம். அவன் வளர்க்கும் சேவலும் காட்டு மிருகமாய் வீட்டுக்கே வராமல் இருந்தது. பகல், இரவு பாராமல் யாரோ அழைப்பதாகக் காடுகளில் அலைந்து திரிவான். நாளாக நாளாக அவன் நடையிலும் சேவலின் அசைவே தெரிவதைக் கண்டு மக்கள் பீதியுற்றனர். அவன் உடம்புக்குள் ‘கோழிராணி’ என்ற பேய் பிடித்திருப்பதாக நம்பினர். எல்லாவற்றிற்கும் மேலாக சேவலுக்குக் ‘‘காதுகுத்துப் பத்திரிக்கை’’ கொடுத்து ஊரையே வியப்படையச் செய்தான். மகாலிங்கம் முழுவதுமாக சேவலும், மனிதனுமாக மாறி மாறி உருக்கொண்டிருந்தான்.

**“ஒரு உயிர்தானே முருகனின் சேவல் கொடியாய் மாறியது. கொடி சூரன் உயிர் தானே? ஒரு உயிர்… இன்னொன்றாக மாறுகிறது. அழிவு என்பது அடுத்த உயிரின் பிறப்புதானே… அது எதுவாக இருந்தால் என்ன? மனுசன் மறைய சேவல். சேவல் மறைந்தால்… ஏன்? மனுசனாகக் கூடாது. இது யாவருக்கும் சாத்தியம் தான்… தூரதேசத்தில் நடக்கும் பூகம்பத்தை நம் காட்டுப் பறவைகள் அறிந்து கொள்வதில்லையா அதுபோல் இதுவும்”**[12] (சே.ப.102) இவ்வாறு மகாலிங்கம் கதாபாத்திரம் அனைவருக்கும் ஒரு மாயையான தோற்றத்தை உருவாக்குவதாக அமைந்துள்ளது.

**பொன்னுச்சாமி**

சேவக்கட்டில் வெற்றிபெற்ற சேவலுடன் வீர நெஞ்சோடு புகைப்படம் பிடித்து வீடு முழுவதும் தொங்கவிட்டு அழகு பார்ப்பவர் பொன்னுச்சாமி. ஒருமுறை தான் அசந்த சமயத்தில்

கட்டில் வெற்றி பெற்ற சேவலை அவன் மனைவி கறியாக்கினாள். தான் உண்ட உணவுக்கறி தான் ஆசையாய் வளர்த்த ''சேவல்கட்டுச் சிங்கம்'' என்பதைத் தெரிந்து கொண்டார். அவ்வளவு தான்… மனைவியைப் பலமாய் ஓங்கி மிதித்து அவளைக் குற்றுயிரும், குலையுயிருமாய் மருத்துவனைக்கு அனுப்பிவிட்டு சேவல்கட்டே பெரிதென அங்கே மும்முரமாய் ஆட்டத்தைக் கண்டுகொண்டிருந்தார். இவ்வாறு சேவலே தனக்குச் சோறு போடுவதாகவும் அதனைக் கழுத்துத் திருக மனைவிக்கு எவ்வாறு மனம் வந்தது எனவும் தீராத கோபத்துடன் கொதித்துக் கொண்டிருந்தார். மனைவி இறந்த பின்னும் பொன்னுச்சாமி சேவலைப்பற்றிய நினைவில் மட்டுமே மூழ்கியிருக்கிறார்.

**"கட்டு கட்டுன்னு சாவலே கட்டிக்கிட்டே அழுதா… குடும்பம் உறுப்படுமா…" அவர் காதுபடவே அனைவரும் திட்டினார்.**

**"படுபாவி மிதிச்சே கொன்னுட்டியேடா…"**

**"நீயெல்லாம் ஒரு மனுஷன்… உனக்கெல்லாம் பொண்டாட்டி எதுக்கு…?"**[12] (சே.ப.109) மனைவியின் இறப்பு நிகழ்வில் உறவினரால் கேட்கப்படும் சொற்களும் அவரை ஒன்றும் அசைக்கவில்லை. இவ்வாறு பொன்னுச்சாமியின் பாத்திரமானது சேவல்களின் மீது தீராத காதல் கொள்ளும் விதமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

**அங்கம்மா**

ஆரம்பத்தில் சேவல்கட்டை ஆடியவர்கள் பெண்கள் தான். ''காளைகளை ஜெயிக்கச் சொல்லி வாக்கப்பட்ட மாதிரி, தாங்கள் வளர்த்த சேவல்களை வெற்றி கொண்டால் தான் திருமணம்'' என கூறிய பெண்கள் இந்த ஊரில் ஏராளம்.

கொம்பூதியில் சேவல்கட்டின் குரு அங்கம்மா. கட்டில் சேவலைக் கையில் தூக்கிய மாத்திரத்தில் அதன் எடையினைக் கணக்கிட்டு போட்டிச் சேவலைத் தேர்ந்தெடுப்பவள். பார்த்த உடனே சேவல்களின் கத்திமுனையை வேறுபடுத்திக் காட்டும் திறமை பெற்றவள். சேவக்கட்டில், பெண்ணாக இருந்தும் அவளின் மேல் ஆண்களும் நம்பிக்கை கொள்ளும் சேவக்கட்டு நுணுக்கங்களை அதிகமாக அறிந்தவளாக, அங்கம்மா பாத்திரம் புதினத்திற்கு மேலும் வலு சேர்க்கிறது.

**"இதை இப்ப இறக்காதேடி… பொழுதுசாய சூரியன் மறையும் போது இறக்கு…"**

**"இந்த சேவலுக்கு எள்அளவு கத்தி முனை பெரிசா இருக்கு… வேற சாவக்கத்தியே கெட்டுங்கடி…"**

**"அடி ஆத்தே… கிழவிக்குக் கண்ணும், கணக்கும் நீரிலே தடம்பார்த்துவிடும் போலிருக்கு…"**[14] **வள்ளியம்மை வாப்பாரி போனாள்.** (சே.பக்.28-29)

மேற்கண்டவாறு அங்கம்மா கதாபாத்திரத்தின் மூலம் சேவல்கட்டில் பெண்கள் சிறப்புற்றிருந்ததை அறிய முடிகிறது.

**வேலாயி**

சேவுகனின் மனைவியாகிய வேலாயி தன் கணவன் சேவல்கட்டில் தனது சொத்துக்களையெல்லாம் இழந்து வருவதைக் கேள்விப்படுகிறாள். ஓவியன் வரைந்து கொடுத்த சேவல் ஓவியம் ஒவ்வொரு பொழுதுக்கும், நிமிடத்துக்குமாக அது தன் நிறத்தை மாற்றி மாற்றி சேவுகனோடு பேசிக்கொண்டிருக்கும் நிலைக்குச் சென்றான் சேவுகன். கணவனின் இந்நிலையைக் கண்டு அவள் அழுது அரட்டத்தான் முடிந்தது. வேறொன்றும் செய்ய இயலாத நிலையில் வேலாயி கதாபாத்திரம் அமைந்துள்ளது. அழுது அழுது கண்ணீரும் வற்றி, அவளால் இனி துக்கப்படக் கூட இயலா மனநிலையில் இருக்கிறாள்.

இவ்வாறு தான் இறக்கும் தருவாயிலும் கணவனின் வருகைக்காகக் காத்திருக்கும் துன்பநிலையைக் காண முடிகிறது.

**செவல்பட்டி வில்லி**

வில்லி, சேவல் ஜோசியத்தில் கெட்டிக்காரர். தனக்கு வருமானம் இல்லாவிட்டாலும் இறைவன் தனக்களித்த வரமாக எண்ணி இத்தொழிலை நெடுங்காலமாகச் செய்து வருபவர். சுற்றுவட்டாரக் கட்டு அனைத்திற்கும் நல்ல நேரத்தைக் குறித்துக் கொடுப்பார். சேவலின் பிறந்த நேரம், கிழமை, ஆண்டு ஆகியவற்றைக் கேட்டும், கணித்தும் சேவல் ஜாதகத்தையும் எழுதுபவராக இந்தப் பாத்திரம் இடம்பெறுகிறது.

**முடிவுரை**

புதினத்தின் கதைநிகழ்வுக்கு யார் முதன்மைக் காரணியாக இருக்கிற்களோ அவர்களே முதன்மைப் பாத்திரமாகக் கருதப்படுகிறார்கள். மற்றவர்கள் துணைமைப் பாத்திரங்களாக இடம்பெற்று கதையின் களத்தைச் சிறப்பிக்கின்றனர்.

ம.தவசியின் புதினத்தில் பாத்திரப்படைப்பு மற்ற புதினங்களிலிருந்து பெருமளவு வேறுபட்டதாக உள்ளது. பாத்திரப்படைப்பில் ஆணிற்கு இணையாகப் பெண்ணிற்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

நாளும் நாம் காணும் மனிதர்களிடம் நன்மை, தீமை இவையிரண்டு குணங்களும் இருக்கக் காண்கிறோம். கதையில் இடம்பெறும் மனிதர்களும் அவ்வாறே தனது இயல்புத்தன்மையை வெளிப்படுத்துகின்றனர். உலகியலில் மனிதர்களுடன் உயிரினங்களும் மனித குணத்தின் வார்ப்பாகத் தன் இயல்பை மாற்றிக் கொள்கிறது. மனிதர்களைப் போலவே இறுதிவரை தன் வாழ்விற்குரிய போராட்டக்குணத்தை வெளிப்படுத்தும் விதமாக ‘‘சேவல்’’ இப்புதினத்தில் இடம்பெறுகிறது. கதாபாத்திரங்கள் முழுக்கமுழுக்க சேவலுக்கும் மனிதனுக்குமாகவும், மனிதனுக்கும் சேவலுக்குமாகவும் படைக்கப்பட்டுள்ளது. சேவல் சண்டையைப் பற்றி வெகுநுட்பமாக, அறிந்துகொண்ட மனிதர்கள் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டு இப்புதினத்திற்கு சிறப்பு சேர்க்கின்றனர்.

**சான்றெண் விளக்கம்**


1. க. கைலாசபதி. தில்லி தமிழ்ச்சங்க வெள்ளிவிழா மலர் ப.39
2. அ.ச. ஞானசம்பந்தன். இலக்கியக்கலை ப.316
3. ந. பிச்சமூர்த்தி, திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கையும், ப.227.
4. த.வே. வீராசாமி, கல்கி - அகிலன் படைப்புக்கலை . ப.81
5. ம.தவசி, சேவல்கட்டு ப.15
6. மேலது, ப.47
7. மேலது, ப.50
8. மேலது, ப.102

9. மேலது, ப.109
10. மேலது, பக்.28-29

**துணை நின்ற நூல்கள்**


1. சேவல்கட்டு
   புதுமைப்பித்தன் பதிப்பகம்
   ப.எண்:57, 53வது தெரு, 9வது அவென்யூ
   அசோக்நகர் சென்னை, முதற்பதிப்பு - 2009.
2. தமிழ்நாவல் இலக்கியம்
   நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்
   சென்னை (முதற்பதிப்பு - 1968)
3. நாவல் இலக்கியம், ராஜீவ்காந்தி பதிப்பகம், கோயம்புத்தூர்.